

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை அவரது இல்லத்தில் முன்னாள் அமைச்சரும் கழகத் துணைப் பொதுச் செயலாளருமான முனைவர் க.பொன்முடி அவர்கள் தமது பிறந்தநாளை முன்னிட்டு நேற்று முன்தினம் (18.8.2026) சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



முதுதமிழ் அறிஞர் கலைஞர் அவர்களால் திருவாரூரில் உருவாக்கித்தரப்பட்டிருக்கும் தமிழ்நாடு மதியப்பல்கலைக்கழகத்தின் 11 வது பட்டமளிப்பு விழாவில் குடியரசு துணைத்தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன், ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் வேந்தர் பேராசிரியர் கோ. பத்மநாபன்,துணைவேந்தர் பேராசிரியர் சுலோச்சனா சேகர்,முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் கிருஷ்ணன், வை.செல்வராஜ் எம்.பி., உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### பல்வேறு நாடுகளில் உயர்கல்வி பயிலும் மாணவர்களுக்கு வழங்க வேண்டிய

# உதவித் தொகையை வழங்காமல் அவர்களின் எதிர்காலத்தை கேள்விக் குறியாக்கும் த.வெ.க. அரசு!

## கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி டிவிட்டர் பதிவு!

சென்னை, ஆக.20-

பல்வேறு நாடுகளில் உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கு வழங்க வேண்டிய உதவித் தொகையை வழங்காமல் அவர்களின் எதிர்காலத்தை கேள்விக் குறியாக்கும் த.வெ.க. அரசு என்றும் இத் திட்டம் தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்டது என்பதற்காக இதையும் திட்டமிட்டு மறைமுகமாக செயலிழக்கச் செய்து நிறுத்துவதுதான் இந்த அரசின் நோக்கமா என்றும் தமது டிவிட்டர் பதிவில் கேள்வி எழுப்பியுள்ளார்.

இதுகுறித்து கனிமொழி கருணாநிதி அவர்களின் டிவிட்டர் பதிவு வருமாறு:-

அண்ணல் அம்பேத்கர் அயலக உயர்கல்வி உதவித்தொகைத் திட்டத்தின் கீழ், மலேசிய தேசியப் பல்கலைக் கழகம் உள்ளிட்ட பல்வேறு நாடுகளிலுள்ள உயர்கல்வி நிலையங்களில் பயிலும் நூற்றுக்கணக்கான மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய உதவித்தொகையை வழங்காமல், அவர்களின்



எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கியுள்ளது த.வெ.க. அரசு.

தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்ட திட்டம் என்பதற்காக, இதையும் திட்டமிட்டு மறைமுகமாக செயலிழக்கச் செய்து நிறுத்துவதுதான் இந்த அரசின் நோக்கமா? உடனடியாக நிலுவையிலுள்ள உதவித் தொகையை விடுவித்து, மாணவர்களின் கல்வியைத் தடையின்றி தொடரச் செய்ய வேண்டும்.

இவ்வாறு கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தமது டிவிட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டாரத்தில் உள்ள

# 176 பொது விநியோகக் கடைகளில் உள்ள மின்னணுச் சாதனம் செயல்படவில்லை!

## மின்னணு சாதனத்தைத் திரும்ப ஒப்படைத்து வட்டார வழங்கல் அலுவலகம் முன்பு முற்றுகைப் போராட்டம்!

தஞ்சாவூர், ஆக. 20

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் வட்டத்தில் 176 ரேஷன்கடைகளில் பொதுவிநியோகத் திட்டத்தின் பாயிண்ட் ஆப் சேல்ஸ் கருவி சர்வர் சிக்னல் கிடைக்காததால் வட்ட வழங்கல் அலுவலகத்தை முற்றுகையிட்டு, பாயிண்ட் ஆப் சேல்ஸ் கருவியை ரேஷன்கடை பணியாளர்கள் வட்ட வழங்கல் அலுவலரிடம் ஒப்படைத்தனர்.

கும்பகோணம் வட்டத்தில் உள்ள 176 ரேஷன் கடைகள் மூலமாக பொது விநியோகத்தட்டத்தின் கீழ் அரிசி, கோதுமை, ஜினி, பருப்பு, பாமாயில் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள் பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. இந்த ரேஷன் கடைகளில் பாயிண்ட் ஆப் சேல்ஸ் கருவி மூலமாக கார்டுதாரர்களின் கைவிரல் ரேகையை பதிவு செய்து அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்படுகிறது.



இந்நிலையில் 10 நாட்களுக்கு மேலாக ரேஷன்கடைகளில் பாயிண்ட் ஆப் சேல்ஸ் கருவி சர்வர் கோளாறு ஏற்பட்டுள்ளதால் காலையில் முதல் மாலை வரை பொதுமக்களுக்கு ரேஷன்பொருட்களை விநியோகிக்க முடியவில்லையாம். மேலும் ரேஷன்கடைக்கு அத்தியாவசியப் பொருட்கள் வாங்க வரும் பொதுமக்களுக்கும், ரேஷன்கடை பணியாளர்களுக்கும் சர்வர் பிரச்சனையால் தேவையற்ற வாக்குவாதங்கள், தகராறுகள் ஏற்பட்டு வருகிறது.

இந்நிலையில் நேற்று (18ம்தேதி) காலை வழக்கம்போல் ரேஷன்கடைகளுக்கு வந்த ரேஷன்கடை பணியாளர்கள் பாயிண்ட் ஆப் சேல்ஸ் கருவியை இயக்கியபோதும் மீண்டும் சர்வர் சிக்னல் கிடைக்காமல் பிரச்சனை ஏற்பட்டுள்ளது. இதனால் அதிர்ச்சியடைந்த ரேஷன்கடை பணியாளர்கள், தமிழ்நாடு அரசு நியாயவிலைக்கடை பணியாளர் சங்கத்தின் வட்டத்தலைவர் கலைவாணன் தலைமையில், மாவட்ட துணைத் தலைவர் செந்தில்குமார், வட்ட துணை செயலாளர் கார்த்திகேயன், வட்ட துணைத்தலைவர் ஆசைத் தம்பி ஆகியோரின் முன்னிலையில் குடந்தை தாசில்தார் அலுவலகம் முன்பு கூடி பாயிண்ட் ஆப் சேல்ஸ் கருவி சர்வர் பிரச்சனையை தீர்க்கக்கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதனை தொடர்ந்து ரேஷன் கடைப்பணியாளர்கள் கலைந்து சென்று, தாசில்தார் அலுவலகத்தின் மாடியில் உள்ள வட்ட வழங்கல் அலுவலகத்துக்கு சென்று, தமிழ்நாடு ரேஷன் கடை பணியாளர்களின் கோரிக்கை மனுவை வட்ட வழங்கல் அலுவலர் செந்தில்குமாரிடம் வழங்கி பாயிண்ட் ஆப் சேல்ஸ் கருவியையும் ஒப்படைத்தனர்.

இதுபற்றி ரேஷன் கடைப்பணியாளர்கள் கூறுகையில், பாயிண்ட் ஆப் சேல்ஸ் கருவியில் சர்வர் கோளாறு ஏற்பட்டால் கருவியின் நிறுவனத்தை சேர்ந்த மாவட்ட மேலாளர்கள் அல்லது தாலுகா அளவிலான பொறியாளர்கள் ரேஷன்கடை பணியாளர்களுக்கு உரிய பதில் அளிப்பதில்லை. பொது விநியோகத்திட்டம் சிறப்பாகச் செயல்பட தமிழக அரசு, பாயிண்ட் ஆப் சேல்ஸ் கருவியின் சர்வர் பிரச்சினையைத் உடனடியாகச் சரிசெய்ய வேண்டும். இல்லை என்றால் தமிழ்நாடு ரேஷன்கடை பணியாளர் சங்கத்தின் மாநில முடிவின்படி தொடர் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்றார்.

### எம்,எஸ்,கணேஷ்குமார் தலைமையில்! முன்னாள் கழக அமைப்பு செயலாளர்

# விருத்தாசலம் எம்.எஸ்.(எ) எம்.செல்வராசு நினைவுநாள் நிகழ்ச்சி!

கடலூர் ஆக.20. முன்னாள் கழக அமைப்பு செயலாளர், விருத்தாசலம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், ஒருங்கிணைந்த தென்னார்க்காடு முன்னாள் மாவட்டக் கழக செயலாளர் எம்.எஸ் (எ) எம்.செல்வராஜ் அவர்களின் 30 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு கடலூர் மேற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ். கணேஷ்குமார் தலைமையில்,

விருத்தாசலம் பாலக்கரையில் உள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து கழகத்தினர் புகழ் அஞ்சலி செலுத்தினர்.

பிறகு பாலக்கரையில் இருந்து மௌன ஊர்வலமாக சென்று அவரது வீட்டில் உள்ள திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து புகழ் அஞ்சலி செலுத்தினர்.

நிகழ்ச்சியில் விருத்தாசலம் நகர கழக செயலாளர் க.தண்டபாணி, ஒன்றிய செயலாளர்கள் தி.வேல் முருகன், கனக கோவிந்தசாமி, கோட்டேரி. சுரேஷ், ஆசைத் தம்பி, பாத்திரக்கடை செல்வம், மாவட்ட ஆதிதிராவிட நலக்குழு அமைப்பாளர் எஸ். ராமு, பொதுக்குழு உறுப்பினர்கள் அரங்க. பாலகிருஷ்ணன், குரு சரஸ்வதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சுந்தரமூர்த்தி, மாவட்டப் பிரதிநிதி ஆட்டோ பாண்டியன், அவைத் தலைவர் செங்குட்டுவன், நகர இளைஞரணி அமைப்பாளர்கள் பொன். கணேஷ், வெங்கடேசன், அருண் பிரபாகர், அப்துல் அஜித், நகர நிர்வாகி விருத்தாசலம் வடக்கு ஒன்றிய துணை செயலாளர் தர்ம. மணிவேல், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் அறிவுடை நம்பி, முகமது பாசில், வழக்கறிஞர்கள் இளங்கோ, எம்.கே. அருள்குமார், கே. ரவிச்சந்திரன் முத்து, விருத்தாசலம் நகர மன்ற உறுப்பினர்கள் அன்பழகன், தளபதி, அறிவழகி முருகன், வசந்தி புருஷோத்தமன், தீபா மாரிமுத்து, ராசாத்தி சரவணன், நல்லூர் வடக்கு ஒன்றிய துணை செயலாளர் பூலாம்பாடி டி. அண்ணாதுரை வயலூர் கு. பழனிசாமி நகர இளைஞரணி துணை அமைப்பாளர்கள் நிஷாந்த், இளையராஜா, பெரியநெசலூர் ஓ.குமார் மற்றும் மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர்,கிளை கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டு புகழஞ்சலி செலுத்தினர்.

## ஊரான் வீட்டு காசுல உங்க

# சீட்டுக்கு

## ஸ்வீட் செய்யாதீங்க CM சார்!

### தி.மு.க. ஐ.டி. விங் விமர்சனம்!



Tender norms violated in CM's ₹5.5cr new office work

E-Tenders Floated Five Days After Print Ads

Omjasvin.MD@timesofindia.com

Chennai: Contrary to the TVK govt's claim and promise of transparency in tenders, the ₹5.54 crore tender for chief minister C Joseph Vijay's 10th floor office at Namakkal Kavignar Maligai is shrouded in secrecy and has deviated from mandatory tender rules.

First, none of the three tenders was floated online. Second, even before the tender process began, dismantling and other works had started, indicating finalisation of a contractor, before any tender was floated. Third, the tenders were published in newspapers and went online four days later, that too after TOI sought responses from officials about the absence of an e-tender. And finally, the print and e-version of the tenders were different, with the former specifying ₹5.54 crore as tender value, while the latter was silent on the sum.

PWD's Buildings (Construction and Maintenance) wing issued the notification of the tender on Aug 12, and again on Aug 13, inviting contractors to submit applications until Sept 1 at 3pm.

Four days later, after TOI asked PWD secretary R Selvaraj at 9.30am on Monday about why the tender was not floated online, he said it would be done. The department put the tender online at 10am the same day.

The delay is striking because PWD had floated 135 tenders online between Aug 12 and Aug 17, yet the three tenders for the CMO office were not put online until TOI raised the issue with the secretary. The tender documents contain detailed specifications for the proposed CMO, including double-leaf fire-rated doors, 90mm-thick plywood partition walls, full-body tiles, swan-neck taps, mirrors and glass, among other works. The contractor has been given three months to complete the project, with penalties specified for delays and other violations.

But the online tender documents do not mention the project cost or the cost of individual construction items. Though the newspaper notices carried the tender value, the corresponding cost section on the online portal was marked "NA".

Anti-corruption NGO Arappor Iyakkam convener Jayaram Venkatesan said the tender template largely followed those used by previous regimes but questioned the absence of cost details online. "They must specify the project cost and cost for each quantity of work, so contractors can arrive at competitive estimates," he said.

PWD secretary Selvaraj denied that any work had begun before tendering.



QUESTIONS RAISED: Public works department denied any pre-tender work at the conference hall

THE IDEAL PROCESS

- Tenders are published in district bulletin/newspapers
- Published online in Tamil Nadu tenders website (those above ₹50 lakh)
- Estimates, scope of work to be present in docs
- A 15-day window minimum for tenders to be active
- Contractors get ample time to participate
- Contractors can arrive at competitive bids

**சென்னை,ஆக.18–**

**பொதுமக்களின் வரிப் பணத்தில் ரூ.5.54 கோடியில் அமைக்கப்படும் கடற்கரை தெரியும் வகையிலான முதலமைச்சரின் 10–வது மாடி அலுவலகப் பணிகளுக்கான டெண்டரில் பல விதிமுறைகள் மீறப்பட்டுள்ளன.**



கோயம்புத்தூர் மாநகராட்சி பிரதான அலுவலக வளாகத்தில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன் தேசியக் கொடியேற்றி வைத்து, Dengue Prevention League (11,84,259 களன்களை சேகரித்து) போட்டியில் வெற்றி பெற்ற கிழக்கு மண்டலத்திற்கு கோப்பை வழங்கினார். உடன் மாநகராட்சி ஆணையாளர் கட்டா ரவி தேஜா, துணை மேயர் ரா.வெற்றிசெல்வன், துணை ஆணையாளர்கள் த.குமரேசன், ர.சரஸ்வதி, குழுத்தலைவர்கள் வி.ப.முபசீரா நிதிக்குழு, தீபா தளபதி இளங்கோ கணக்குகள் குழு, சோமு (எ) சந்தோஷ் நகரமைப்புக்குழு, மாற்றுத்திறனாளி நியமன உறுப்பினர் சா.குமார ராஜபாண்டியன், மாநகர நல அலுவலர் மரு. சுபாஷ்காந்தி, உதவி ஆணையர் பிரகாஷ்(நிர்வாகம்), மாமன்ற உறுப்பினர்கள் ஜெயபிரதா தேவி, சித்ரா வெள்ளியங்கிரி, மண்டல சுகாதார அலுவலர் சந்திரன் உட்பட மாநகராட்சி அலுவலர்கள் பலர் உள்ளனர்.

### சட்டமன்றத்தில் தனித்தீர்மானம் நிறைவேற்றிய ஒரே வாரத்தில்

# ஆளுநர் கலந்து கொண்ட பட்டமளிப்பு விழாவில் 3-ஆம் இடத்திற்கு தமிழ்த்தாய் வாழ்த்து தள்ளப்பட்டுள்ளது!

## தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி கேள்வி!

தமிழ்த்தாய் வாழ்த்தின் மரியாதையை பாதுகாப்பதில் தவெக அரசு ஒருபோதும் சமரசம் செய்யாதுஎன முதலமைச்சர் விஜய் தனித்தீர்மானம் நிறைவேற்றி பேசிய ஒரே வாரத்தில் தஞ்சாவூர் சாஸ்த்ரா பல்கலைக்கழகத்தில், ஆளுநர் கலந்துகொண்ட பட்டமளிப்பு விழாவில் 3ம் இடத்திற்கு தமிழ்த்தாய் வாழ்த்து தள்ளப்பட்டுள்ளது!

#Wingகுரல்

